O.S. No.21/2019

13.03.2026

பி.சா. 2

**திருமதி பேபி**

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை**

என்னுடைய திருமணத்தின்போது ஒரு ஏக்கர் நிலத்தை மின்வாரியத்தில் வேலை பார்த்த அருள்ராஜ் என்பவரிடம் அடமானம் வைத்துதான் எனக்கு திருமணம் செய்து வைக்கப்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அருள்ராஜ் என்பவரையே எனக்கு தெரியாது. அருள்ராஜிடம் நிலம் அடமானம் வைத்தது வெளி நபர்களுக்கு தெரியக்கூடாது என்பதால் குடும்பத்தில் சாகுபடி செய்து ராஜேந்திரனால் நெல் கொடுக்கப்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. சில நேரங்களில் அருள்ராஜ் அரிசியாக கேட்டபோது ராஜேந்திரன்தான் அரிசியாக கொடுத்தார் என்றால் இல்லை. அருள்ராஜ் பணி மாறுதலில் வெளியூர் சென்றபோது அவருக்கு சேர வேண்டிய தொகையை ராஜேந்திரன்தான் கொடுத்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. என்

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.03.13 14:33:13 +0530

பெற்றோர்கள் இறந்த போது நான் மொய் செல்வதற்கு என்னிடம் போதிய வசதி இல்லாததால் ராஜேந்திரன் எனக்கு பண உதவி செய்து நீங்கள் செய்வதுபோல் செய்யுங்கள் என என்னிடம் கூறினார் என்றால் அதுபோல் எதுவும் இல்லை. என் மகனின் படிப்பு செலவிற்கு என் சகோதரர் ராஜேந்திரன் உதவி செய்தார் என்றால் இல்லை, என் அக்கா மகன்தான் எனக்கு உதவி செய்தார், என்னிடம் நகை இருந்தது அதை வைத்து என் மகனை படிக்க வைத்தேன். என் மகள் திருமணத்திற்கு என் சகோதரர் ராஜேந்திரன் 12 பவுன் நகை கொடுத்து ரூ.5,000/- பணமும் மொய்யாக எழுதினார் என்றால் இல்லை, என் அம்மாவும் என் தம்பி வீரசிங்கமும் 2 பவுன் நகை போட்டார்கள், ராஜேந்திரன் மொய் எழுதினாரா என்று எனக்கு தெரியாது. என் தாயார் பெயர் நவநீதம். ராஜேந்திரன் என்னுடைய சகோதரர் என்ற முறையில் எனக்கு நிறைய பண உதவிகள் மற்றும் பொருளுதவிகள் செய்துள்ளார் எனவும் என் சகோதரர் வீரசிங்கம் கேட்டுக் கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு. என் பாட்டி பெயர் கண்ணம்மாள். கண்ணம்மாளின் கணவர் ரெகுநாத தேவர் என் தாய்வழி பாட்டனார் ஆவார். அவருக்கு ஒரே வாரிசு என் அம்மா நவநீதம் மட்டும்தான். கண்ணம்மாளுக்கு நஞ்சை, புஞ்சை நிலங்கள் நிறைய இருந்தன என்றால் சரி. இந்த

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.03.13 14:33:20 +0530

சொத்துக்களுக்கு ஆண் வாரிசுகள் அடிப்படையில் என் சகோதரர்கள் ராஜேந்திரனும் வீரசிங்கமும்தான் உரிமை உள்ளவர்கள் என்றால் சரி. என் பாட்டியும் தாயாரும் சேர்ந்து ஒரு உயிலாவணம் எழுதி வைத்தார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.2 ல் உள்ள விபரங்கள் பற்றி எனக்கு தெரியாது. உயில் எழுதிய விபரம் எனக்கு தெரியும் எனவும் தற்போது என் சகோதரர் வீரசிங்கம் கேட்டுக் கொண்டதால் அவருக்கு ஆதரவாக தெரியாது என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு. என் அப்பா சிவானந்தம் செருமடார் ஆவார். அவர் பெயரில் சொத்துக்கள் உள்ளன. அந்த சொத்துக்கள் கூட்டு குடும்ப சொத்தாகத்தான் உள்ளது. இந்த வழக்கானது கண்ணம்மாள் மற்றும் நவநீதம் பெயரில் உள்ள சொத்துக்களை பொறுத்துதான் நடைபெறுகிறது, என் தந்தையார் பெயரில் உள்ள சொத்துக்கள் குறித்து வழக்கு நடைபெறவில்லை என்றால் ஆமாம். என் தந்தையாருக்கு சொந்தமான சொத்துக்களில் எனக்கு பாக உரிமை உண்டு எனவும் தந்தையார் சொத்தை பொறுத்து வழக்கு எதுவும் நடைபெறவில்லை எனவும் சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. என் சகோதரர் வீரசிங்கம் கேட்டுக் கொண்டதன் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் எனவும் நான் இந்த வழக்கில் சாட்சி அளிப்பதற்கு எந்த முகாந்திரமும் இல்லையெனவும் நான் தேவையற்ற சாட்சி

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.03.13 14:33:25 +0530

எனவும் சொன்னால் தவறு.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI Digitally signed by SELVA MUTHU KUMARI Date: 2026.03.13 14:33:30 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,

திருவாரூர்.

O.S. No.21/2019

13.03.2026

பி.சா. 3

திருமதி ராஜேஷ்வரி

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

குறுக்கு விசாரணை

பிரதிவாதி ராஜேந்திரன் என்னுடைய சகோதரர் என்றால் சரி, எனக்கும் ராஜேந்திரனுக்கும் பேச்சு வார்த்தை இல்லை. என்னுடைய பெயர் மாரியம்மாள் (எ) ராஜேஷ்வரி ஆகும். என் ஆதார் கார்டில் ராஜேஷ்வரி என்றுதான் உள்ளது. ஆரம்பத்தில் நிலங்களை நான்தான் நிர்வகித்து வந்தேன். வீரசிங்கம் அப்போது வயலுக்கு வருவதில்லை என்றால் தவறு. விவசாய நிலங்களை நான் பராமரித்து குடும்ப வரவு-செலவுகளை எனக்கு திருமணம் ஆகும் வரை நான்தான் பராமரித்து வந்தேன். ஒரு ஏக்கர் நிலத்தை அடமானம் வைத்துதான் பேபிக்கு திருமணம் செய்து வைக்கப்பட்டது என்றால் இல்லை. எனது திருமணத்திற்கு அமிர்தா பைனான்சில் கடனாக தொகை பெற்று TVS பைக் வாங்கி கொடுத்தார்கள் என்றால் இல்லை. ராமச்சந்திரன் யாரென்று

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.03.13 14:33:36 +0530

எனக்கு தெரியாது. ராஜேந்திரன் வேலைக்கு சென்று ராமச்சந்திரன் பெயரில் ரூ.30,000/- அமிர்தா பைனான்சில் கடன் வாங்கிதான் எனக்கு பைக் வாங்கி கொடுத்தார்கள் என்றால் இல்லை. எனது திருமணத்திற்கு ஜோதிவேல் மனைவி வேதவள்ளியிடம் 150 குழி நிலம் விற்கப்பட்டது என்றால் இல்லை, 60 குழிதான் விற்கப்பட்டது. எனது திருமணத்தின்போது எனக்கு வாங்கப்பட்ட நகைகளுக்கு மொய் பணத்தை கொண்டு கடனை திரும்ப கொடுப்பதாக நகை வாங்கப்பட்டது என்றால் தவறு. ராஜேந்திரனின் மனைவி கையிலிருந்த 5 பவுன் வளையலை கழட்டி எனக்கு கொடுத்தார்கள் என்றால் இல்லை, அக்கா தங்கைகளை கல்யாணம் செய்து கொடுத்தோம் என ஒரு நாள் கூட ராஜேந்திரன் வந்து எங்களை பார்த்ததில்லை. அனிதா என் அக்கா ஜெயலெட்சுமியின் மகள். அனிதா திருணமத்திற்கு என் சகோதரர் வீரசிங்கம் போஸ் என்பவரிடம் ரூ.40,000 கடன் வாங்கினார் என்றால் இல்லை. அந்த பணத்தின் அசல் மற்றும் வட்டி தொகையை ராஜேந்திரன்தான் திரும்ப அடைத்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. ராஜேந்திரன் என் சகோதரர் என்ற முறையில் எனக்கும் என் பிள்ளைகளுக்கும் நிறைய நல்லது கெட்டது செய்துள்ளார் எனவும் என் தம்பி வீரசிங்கம் கேட்டுக் கொண்டதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு. இந்த வழக்கானது என் தாயார்

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.03.13 14:33:41 +0530

பெயரில் உள்ள சொத்துக்குதான் நடக்கிறது, என் அப்பா பெயரில் சொத்துக்கள் உள்ளன, அதில் எனக்கு பங்கு வேண்டும். என் சகோதரர் வீரசிங்கம் கேட்டுக் கொண்டதாலும் சகோதரர் ராஜேந்திரனுடன் எனக்கு பேச்சு வார்த்தை இல்லையென்பதாலும் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு. என் தகப்பனார் பெயரில் உள்ள சொத்துக்களில் என் சகோதர, சகோதரிகளுக்கு பாகம் கொடுக்க வேண்டும் என என் சகோதரர் ராஜேந்திரன் சொன்னார் என்றால் அது பொய். நான் உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.03.13 14:33:46 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,

திருவாரூர்.

O.S. No.21/2019

13.03.2026

**பி.சா. 4**

**திருமதி வளர்மதி**

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை**

எனக்கு 3 மகன்கள், எனது 2 வது மகன் சரவணன், எனது 3 வது மகன் சதீஷ் என்றால் சரி. 2 மற்றும் 3 வது மகன்கள் என் தாயார் வீட்டில் வளர்ந்தார்கள் என்றால் ஒரு வயது வரைதான் என் தாயார் வீட்டில் வளர்தார்கள், நான் அப்போதே என் மகன்களை தூக்கி வந்து விட்டேன். என் 2 மகன்களையும் வீரசிங்கம் வீட்டை விட்டு வெளியே போக சொன்னார் எனவும் அப்போது ராஜேந்திரன் எனக்குரிய சொத்து உள்ளது அதில் அவர்கள் வளரட்டும் என சொன்னார்கள் என்றால் அவ்வாறு எதுவும் நடக்கவில்லை. என் மகள் பெயர் சமீதா. ராஜேந்திரன் என் மகன்களின் திருமணத்திற்கு மாமா என்ற முறையில் மோதிரம் போட்டார் என்றால் இல்லை. என் மகன் சதீஷ் வெளிநாடு சென்றானா என்றால் சென்றான், நானும் என் கணவரும்தான் செலவு செய்து அனுப்பி வைத்தேன். என் வீட்டுகாரர் மர வியாபாரம் செய்து வந்தார். என் வீட்டுகாரர் இறந்து 10

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.03.13 14:33:51 +0530

வருடங்கள் இருக்கும். என் மகன் சதீஷை ராஜேந்திரன்தான் படிக்க வைத்து வெளிநாடு அனுப்பி வைத்தார் என்றால் இல்லை. ராஜேந்திரன் எனது அண்ணன் இல்லை, வீரசிங்கம்தான் என் தம்பி. தாவா சொத்து கண்ணம்மாள் நவநீதம் ஆகியோருக்கு சொந்தமானது என்றால் சரி. அந்த சொத்தை பொறுத்துதான் வழக்கு நடைபெறுகிறது என்றால் சரி. தாவா சொத்தை பொறுத்து என் பாட்டியும் என் அம்மாவும் உயில் எழுதி வைத்துள்ளார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. என் அப்பா சொத்து உள்ளது, என் தந்தை சொத்தில் எனக்கு பாகம் வேண்டும். பாட்டி மற்றும் என் அம்மா சொத்திலும் பங்கு வேண்டும். தாவா சொத்தை பொறுத்து என் பாட்டியும் தாயாரும் உயில் எழுதி வைத்து விட்டதால் பாகம் இல்லையெனவும் என் தந்தையின் சொத்தில் மட்டும் எனக்கு பாகம் உள்ளது எனவும் சொன்னால் தவறு.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.03.13 14:33:56 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,

திருவாரூர்.

O.S. No.21/2019

13.03.2026

**பி.சா. 5**

**திருமதி மகாலெட்சுமி**

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை**

வழக்கு சொத்து எனது பாட்டி கண்ணம்மாள் மற்றும் என் தாயார் நவநீதத்திற்கு சொந்தமான சொத்து என்றால் சரி. இந்த சொத்தை பொறுத்து என் பாட்டியும் தாயாரும் உயில் எழுதி வைத்துள்ளார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. என் தகப்பனார் சொத்து உள்ளது. இந்த வழக்கை பொறுத்து நான் தேவையற்ற சாட்சி என்றால் தவறு. நானும் ராமேஷ்வரியும் இரட்டை குழந்தைகள். என்னுடைய திருமணத்திற்கு ஒரு ஏக்கர் நிலம் விற்கப்பட்டது என்றால் இல்லை. எனது திருமணத்திற்கு எனது சகோதரர் வீரசிங்கத்தால் வாங்கப்பட்ட கடன் தொகையை என் சகோதரர் ராஜேந்திரன்தான் அடைத்தார் என்றால் எனக்கு தெரியாது. தாவா சொத்தை பொறுத்து என் பாட்டியும் தாயாரும் உயில் எழுதி வைத்து விட்டதால் பாகம்

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.03.13 14:34:01 +0530

இல்லையெனவும் என் தந்தையின் சொத்தில் மட்டும் எனக்கு பாகம் உள்ளது எனவும் சொன்னால் தவறு.  இந்த வழக்கை பொறுத்து நான் தேவையற்ற தரப்பினர் என்றால் தவறு.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.03.13 14:34:07 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,

திருவாரூர்.

**O.S. No.21/2019**

**13.03.2026**

**பி.சா. 6**

**திருமதி ராமேஷ்வரி**

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை**

நானும் மகாலெட்சுமியும் இரட்டை குழந்தைகள் என்றால் சரி. என் திருமணத்தின்போது என் கணவருக்கு TVS பைக் வாங்கி கொடுக்கப்பட்டது என்றால் இல்லை. என்னுடைய திருமண செலவிற்கு வெளியில் ரூ.1,00,000/- கடன் வாங்கப்பட்டது என்றால் என் அம்மாவும் வீரசிங்கமும் வாங்கியது. என் அம்மா வீட்டு குடித்தனம், என் சகோதரர் வீரசிங்கம் விவசாயம் செய்து வருகிறார். என் சகோதரர் ராஜேந்திரன் அரசு ஊழியர் என்றால் சரி. ராஜேந்திரனின் வருமானத்தை கொண்டுதான் கடன் அடைக்கப்பட்டது என்றால் இல்லை. வழக்கு சொத்து என் பாட்டி கண்ணம்மா மற்றும் என் தாயார் நவநீதத்திற்கு சொந்தமானது என்றால் சரி. இ ந்த சொத்தை பொறுத்து அவர்கள் இருவரும் உயிலாவணம் எழுதி வைத்தார்கள் என்றால் அதுபற்றி எனக்கு

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.03.13 14:34:14 +0530

தெரியாது. என் தந்தையார் சொத்து தனியாக உள்ளது. இந்த வழக்கை பொறுத்து நான் தேவையற்ற தரப்பினர் என்றால் தவறு. வழக்கு சொத்தில் எனக்கு பாகம் கிடையாது என்றால் உண்டு எனக்கு பங்கு வேணும். என் தந்தை சொத்திலும் பங்கு வேணும்

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.03.13 14:34:21 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,

திருவாரூர்.